அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இல: 9/88

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-07.
1988, 03.30

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்,

இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்
களுக்கு பட்டப் பின்படிப்பு நெறிக்கான வாய்ப்புகள்.

பொது நிருவாகத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பு நெறியைப் பின்பற்று வதற்காக ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் தேர்ந்தெடுக்கப்படும் இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களை ஒரே தடவையில் பதினைந்து பேருக்கு அதிகப்படாத எண்ணிக் கையினரை பதினெட்டு மாத காலத்துக்கு முழுச் சம்பள லீவில் சேவையிலிருந்து விடுவிக்கலாம்.

02. இந்த உத்தியோகத்தர்களின் வழமையான கடமைகள் கடுமையாக பாதிக்கப்படாதவாறும் சேவையின்றுவிடுவிக்கப்படுதல் இலகுவாக அமைதற்பொருட்டும் சனிக்கிழமைகளிலும் வாரத்தில் இரண்டு நாட்களிலும் பகற்கால நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு நிறுவனம் இணங்கியுள்ளது. இந்தப் பாடநெறிக்காக உத்தியோகத்தர் களை நிறுவனமே தேர்ந்தெடுக்கும், இப்பாடநெறியைப் பின்பற்ற விரும்பும் உத்தியோ கத்தர்கள் தத்தமது திணைக்களத் தலைவர்கள் மூலம் நேரடியாக உரிய நிறுவனத்துக்கு விண்ணப்பிக்கும்படி கேட்கப்படுகிறார்கள். அந்தந்த அமைச்சுக்கான மீண்டு வரும் செலவினத் தலைப்பின் கீழ் கிடைக்கக் கூடியதாயுள்ள நிதியைப் பொறுத்தே சேவை யிலிருந்து எத்தனை உத்தியோகத்தர்களை விடுவிக்கலாம் என்பது தீர்மானிக்கப்படும். எது எவ்வாறாயினும் 1988 ஆம் ஆண்டிற்கான உத்தியோகத்தர்கள் பேரில் தேவைப் படும் பணம் இந்த அமைச்சுக்கென அனுமதிக்கப்பட்டவாக்குப் பணத்திலிருந்துபெற்றுக் கொள்ளப்படும்.

03. இந்தச் சலுகையை அனுபவிக்க விரும்பும் உத்தியோகத்தர், உள்ளூர் பாட நெறிகள் தொடர்பாக தற்பொழுது நடை முறையிலுள்ள நியதிகளுக்கமைய மூன்று வருட காலத்துக்கு அரசாங்கத்தில் சேவை செய்வதென ஓர் ஒப்பந்தம் செய்து கொள்ள நேரிடலாம்.

04. ஏலவே இந்நாட்டில் அல்லது வெளிநாட்டில் ஒன்பது மாதங்களுக்கோ அதற்குக் கூடிய காலத்துக்கோ ஏதேனும் பயிற்சியைப் பெற்றிருக்கும் ஓர் உத்தி யோகத்தருக்கு இந்தச் சலுகை வழங்கப்படமாட்டாது.

ஒப்பம்: டி.பீ.ஐ.பி.எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.